**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வேலூர் மாவட்ட வருவாய் அலகு – திரு.ஜெ.கோகுல்ராஜ், த/பெ. காலஞ்சென்ற திரு.ஜெகன்நாதன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**

**பணிகள் அலகு, பணி-9(1) பிரிவு**

அரசாணை (3டி) எண். 130

நாள் 25.07.2023.
சோபகிருது வருடம், ஆடி-9,
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ஆ.கு.4/45617/2019, நாள் 21.08.2022.

******

**ஆணை:-**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், வேலூர் மாவட்ட வருவாய் அலகில் கிராம உதவியாளராகப் பணியாற்றி பணியிடையே 20.01.2015 அன்று காலமான திரு.ஜெகன்நாதன் என்பவரின் மனைவி திருமதி.ராணி என்பவர் தனது மகன் திரு.ஜெ.கோகுல்ராஜ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 15.06.2015 அன்று விண்ணப்பம் அளித்துள்ளார் என்றும், இவ்விண்ணப்பம் மூன்றாண்டு காலக்கெடுவிற்குள் பெறப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது என்றும், இதனைத் தொடர்ந்து தனியர் திரு.ஜெ.கோகுல்ராஜ் என்பவருக்கு இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு தனியர் 28.05.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், தனியரின் பணிநியமனத்தை தனியர் பணியேற்ற நாளான 28.05.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசாணையினை பெற்றுத் தருமாறு வேலூர் மாவட்ட ஆட்சியர் கோரியுள்ளார் என்றும், விண்ணப்பம் அளிக்கப்பட்ட தேதியில் தனியர் 15 வயதினை பூர்த்தி செய்துள்ளார் என்றும், பத்தாம் வகுப்பு தேர்ச்சி (மார்ச்-2015) பெற்றுள்ளார் என்றும், தனியர் அரசுப் பணியில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட தேதியில் 18 வயதினை பூர்த்தியடைந்துள்ளார் என்றும், வேலூர் மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவினை ஏற்று, தனியர் திரு.ஜெ.கோகுல்ராஜ் என்பவர் பணிநியமனம்

//த.பி.பா//

கோரி விண்ணப்பம் அளித்த நாளில் 18 வயதினை பூர்த்தியடையாத காரணத்தினால், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, சட்டப்பிரிவு 20(6)(b) மற்றும் அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்.23.01.2020 ஆகியவற்றை தளர்வு செய்து தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் 28.05.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசாணையினைப் பெற்றுத் தருமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை அரசளவில் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. வேலூர் மாவட்ட வருவாய் அலகில், கிராம உதவியாளராகப் பணிபுரிந்து பணியிடையே 20.01.2015 அன்று காலஞ்சென்ற திரு.ஜெகன்நாதன் என்பவரது மகன் திரு.ஜெ.கோகுல்ராஜ் என்பவர் விண்ணப்ப நாளில் குறும வயதினைப் பூர்த்தி செய்யாததால், தனியர் பொருட்டு, மேலே படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவித்துள்ள வயது வரம்பிலிருந்து விலக்களித்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 58-இன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, பிரிவு 20(6)(b) மற்றும் தனியர் பணியேற்ற நாள் முதல் பணப்பலன்கள் பெற பிரிவு 28(2) ஆகியவற்றை மேற்கண்ட சட்டத்தின்படி தளர்வு செய்தும், தனியர் திரு.ஜெ.கோகுல்ராஜ் என்பவர் பணியேற்ற நாளான 28.05.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து, அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.2397/க்யூ.2/2023-1, நாள்.11.04.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.4665852/ஜி.2/2023, நாள்.27.06.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-05.
மாவட்ட ஆட்சியர், வேலூர் மாவட்டம்.
திரு.ஜெ.கோகுல்ராஜ், இளநிலை உதவியாளர்
(வேலூர் மாவட்ட ஆட்சியரின் மூலமாக)
நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்